**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI &
Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts15sp012026.19
https://ngmtamil.in/

# தேனி மாவட்டம் அழகாபுரி பெத்தக்கம்மாள் கோவில் வழிபாடும் நம்பிக்கைகளும்

**முனைவர் இரா.கலைவாணி**
உதவிப்பேராசிரியர், டோக் பெருமாட்டி கல்லூரி, மதுரை

**அறிமுகம்**

தேனி மாவட்டம் சீப்பாலக்கோட்டை அருகில் உள்ள அழகாபுரி கிராமத்தில் தெலுங்கு மொழி பேசும் நாயுடு சமூகத்தவரால் வணங்கப்படும் குலதெய்வம் பெத்தக்கம்மாள். தொல்லியல் ஆய்வுகள், சங்க இலக்கியங்கள் வழி அறியப்படும் நடுகல் வழிபாடு பின்னாளில் குலதெய்வ வழிபாடாக மாறியது என்பது சான்றோர் பலரது கூற்றாகும்.

"ஒளிறு ஏந்து மறுப்பின் களிறு எரிந்து வீழ்ந்தனெக்
கல்லே பரவின் அல்லது

நெல் உகுத்துப் பரவும் கடவுளும் இல்லை" ( புறம். 335 ) என்கிறார் மாங்குடி கிழார் . சங்க இலக்கியங்கள் வழி அறியப்படும் நடுகல் வழிபாடானது போரில் இறந்த வீரர்களை வணங்குவதாக அமைந்துள்ளது. செங்குட்டுவனால் கண்ணகிக்கு எடுக்கப்பட்ட நடுகல் வழிபாடு மட்டுமே பெண்களுக்கான நடுகல் வழிபாடாகக் கிடைக்கின்றது. ஆனால் குலதெய்வ வழிபாடு என்பது பெண் தெய்வ வழிபாடாக இருப்பது குறிப்பிடத்தக்கது . பாண்டி, கருப்பு, முனீஸ்வரர் போன்ற தெய்வங்கள் காவல் தெய்வங்களாக இருக்கின்றனர். அவ்வகையில் தேனி மாவட்டம் அழகாபுரி பெத்தக்கமாள் கோயில் வரலாறும் நம்பிக்கைகளும் நம்பிக்கைகளோடு தொடர்புடைய சான்றுகளும் இக்கட்டுரையில் ஆய்ந்துரைக்கப்படுகின்றன.

**கோயில் நிர்வாகம் அச்சிட்ட கையேடு குறிப்பில் இருந்த தல வரலாறு**

17 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சீப்பாலக்கோட்டை கிராமத்தில் விவசாய குடும்பத்தில் வாழ்ந்து வந்த ரங்கசாமி நாயுடு பின்னாளில் மல்லிகாபுரம் என்னும் ஊரில் குடியேறினார். கால் ஊனமுற்ற தன் முறைப்பெண்ணை மணந்து கொண்டார் . இவர்களுக்கு எட்டு ஆண் பிள்ளைகள் பிறந்தனர். ஒருவர் இறந்து போனார். எஞ்சிய எழுவரில் ஒருவர் போடி அருகில் உள்ள சங்கராபுரத்திலும், இருவர் அழகாபுரியிலும், மற்ற இருவர் சங்கரலிங்கபுரத்திலும் ஒருவர் உத்தமபாளையத்திலும் ஒருவர் கரட்டுப்பட்டியிலும் குடியேறினர். அழகாபுரியில் குடியேறிய

ஒருவருக்குப் பிறந்தவர் பங்காரு திருமலை. ஆங்கிலேய ஆட்சியில் நில வரியை வசூல் செய்ய ஜமீன்தாரி முறை இருந்தது . ஒவ்வொரு ஊரிலும் நாட்டாமை வரி வசூல் செய்து ஜமீன்தாரிடம் கொடுக்க வேண்டும். அழகாபுரி நாட்டாமையாக பங்காரு திருமலை பணி செய்து வந்தார். சீப்பாலக்கோட்டை கிராமத்திற்கு வரி வசூல் செய்ய பங்காரு திருமலை குதிரையில் சென்ற போது அங்கிருந்தவர்கள் "குதிரையில் ஏறியபடி இந்த தெப்பத்தைத் தாண்டி விடுவீர்களா?" என்று கேலியாக கேட்டனர் . சுமார் 80 அடி நீளம் 60 அடி அகலம் கொண்டது இந்த தெப்பம். "தெப்பத்தினைத் தாண்டிவிட்டால் என்ன தருவீர்கள்?" என்று பங்காரு திருமலை கேட்கவே அவருக்குப் பெண் தந்து திருமணம் செய்து வைத்து விடுவதாக கூறியுள்ளனர்.

**திருமணம்**

இந்தச் சவாலை ஏற்றுக் கொண்ட பங்காரு திருமலை ஊரார் குறித்த நாளில் குதிரையில் ஏறி தெப்பத்தைத் தாண்டியுள்ளார். இதை எதிர்பாராத ஊரார் திருமண வயதில் எந்தப் பெண்ணும் இல்லை என்பதை நினைத்து வருந்தியுள்ளனர். இந்நிகழ்ச்சியினைக் கண்டு கொண்டிருந்த பெத்து என்னும் 12 வயது சிறுமி பங்காரு திருமலையை திருமணம் செய்ய விருப்பப்படுவதாகக் கூறியுள்ளார்.

**கணவர் இறப்பு**

பங்காரு திருமலையின் வரி வசூல் செய்யும் பணியின் காரணமாக சிலர் அவர் மீது கோபம் கொண்டு ஏவல் சூனியம் செய்ததால் அவர் உடல் முழுவதும் கொப்புளம் வந்து நோய் கண்டு இறந்து போனார். பூப்படையாத பெண்ணாக தன் தாய் வீட்டில் இருந்த பெத்து இதனை அறிந்து உடன்கட்டை ஏற அனுமதி கூறியுள்ளார். ஆனால் அவர் பிறந்த வீட்டில் அனுமதி அளிக்கவில்லை. இதனால் தன் மாமன் மாமியாரிடம் சென்று அனுமதி கேட்டுள்ளார். அவர்களும் அனுமதி மறுத்துள்ளனர். நீர், உணவு எதுவும் அருந்தாமல் இருந்த பெத்து ஜமீன்தாரிடம் அழைத்துச் செல்லப்பட்டார். ஜமீன்தாரும் அனுமதி மறுத்துவிட்டார். இதனால் கோபமும் வருத்தமும் அடைந்த பெத்து இட்ட சாபத்தினால் ஜமீன் கட்டிடத்தின் ஒரு பகுதி தீப்பற்றத் துவங்கியது. இதன் வழியாக பெத்தக்கம்மாள் சக்தியினை அறிந்த ஜமீன்தார் உடன்கட்டை ஏற சம்மதம் அளித்தார் .

**பூக்குழியில் இறங்குதல்**

கண்டமனூர் ஜமீனால் சந்தன கட்டைகள், நெய் போன்ற தேவையான பொருட்கள் அனுப்பப்பட்டு சீப்பாலக்கோட்டையில் உள்ள தெப்பத்திற்கு அருகிலேயே தீ வளர்க்கப்பட்டது. தெப்பத்தில் நீராடி உடன்கட்டை ஏறச் சென்ற பெத்துவிடம் புடவை வியாபாரி "ஈரத் துணியுடன் இறங்க வேண்டாம் தாயே" என்று மஞ்சள் சேலை அளித்துள்ளார். அப்பூக்குழியில் இறங்கிய பெத்து பெத்தக்கம்மாளாகத் தெய்வமானார்

**செவி வழிக் கதை**

"புராணங்கள், மரபுக் கதைகள், கதைகள், பழமொழிகள், புதிர்கள், நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள், புதிர்கள், நடனம், கதைப்பாடல்கள், வழிபாடுகள், தெய்வங்கள், சடங்குகள், விழாக்கள், வித்தைகள், பில்லி சூனியம், கலை, கைத்தொழில் ஆகியன நாட்டுப்புறவியல் எனப்படும்" என்பார் க.கிருஷ்ணமூர்த்தி.( மக்கள் வழக்காற்றியல்,ப.1 )

அழகாபுரியைச் சேர்ந்த இருவரிடம் கேட்கப்பட்ட போது பெத்தாக்கம்மாள் கம்பளத்து நாயக்கர் குடும்பத்தில் பிறந்தவர் என்றும் இவரை இனம் மாற்றி திருமணம் செய்து கொடுக்க அவர்கள் பெற்றோர் ஒப்புக்கொள்ளவில்லை என்றும் கூறப்படுகிறது . பெற்றோரை எதிர்த்து பங்காரு திருமலையைத் திருமணம் செய்து கொள்ள முடிவு செய்தார். பெற்றோர் உடன்கட்டை ஏற சம்மதிக்காமல் கடும் காவல் இருந்தனர் . எனவே பெத்தகம்மாள் கோபம் கொண்டு “என் கணவர் குடும்பத்தவர் ஒன்று ஆயிரம் ஆகவும், நான் பிறந்த வீடு ஆயிரம் ஒன்றாகவும் வேண்டும்” என்று சபித்ததாகவும் கூறப்படுகிறது. இதனால் தன் கணவர் வீட்டில் ஆண் பிள்ளைகள் அதிகமாக பிறப்பதாகவும் பிறந்த வீட்டில் ஒரு பெண்ணோ அல்லது ஒரு ஆணோ மட்டும் பிறப்பதாகவும் இன்று வரை நம்பப்படுகிறது.

**வழிபடும் முறை**

அழகாபுரியைப் பிறப்பிடமாக கொண்டு வெவ்வேறு மாவட்டங்களில் குறிப்பாக தேனி, மதுரை, சிவகாசியைச் சுற்றி வாழும் பங்காளிகள் மாலை அணிந்து ஒரு மாத காலம் விரதம் மேற்கொண்டு பாதயாத்திரையாக தை மாதம் ஒன்றாம் தேதி ஒன்று கூடி வழிபடுகின்றனர். ஒரு மாதம் முன்பே திட்டமிடப்பட்டு மதுரையிலிருந்து பாதயாத்திரையாகப் புறப்பட்டு செக்கானூரணி, உசிலம்பட்டி, ஆண்டிபட்டி, கண்டமனூர் வழியாக அழகாபுரி அடைகின்றனர். மூன்று நாட்கள் நடைபெறும் இப்பாதயாத்திரை நிகழ்வில் தன்னார்வல உறவினர்கள் உணவு, சிற்றுண்டி மற்றும் தங்கும் இடம் கொடுத்து ஊக்கப்படுத்துகின்றனர். "நாட்டுப்புற மக்களிடம் பெருந்தெய்வ வழிபாடுகள் இருந்த போதிலும் தொன்மை சமயமாகிய சிறு தெய்வ வழிபாடுகள் அவரவர் வீட்டு பிறப்புச் சடங்கு ஆகிய காலகட்டங்களில் அந்தந்த இனத்தவர்கள் தங்கள் குடும்பங்களுக்கான சிறு தெய்வங்களை முறையாக வழிபடுகின்றனர்" என்பார் பேராசிரியர் அ. ராஜேந்திரன் (நாட்டுப்புற பண்பாட்டு பழக்கவழக்கங்கள் ,ப.94)

**ஐந்து தாத்தாக்கள் சமாதி**

தை ஒன்றாம் தேதி கோவில் சார்பில் ஐந்து தாத்தாக்கள் சமாதி உள்ள இடத்தில் பொங்கல் வைக்கப்படுகின்றது. எழுவரில் இருவர் குடியேறிய சங்கராபுரம் சென்று அங்கும் பொங்கல் வைக்கப்படுகிறது. பிறகு பெத்தக்கம்மாள் சன்னதியில் சிறப்பு வழிபாடாக பாடல்கள் வழி பூசைகள் நடைபெறுகின்றன .இந்நாட்களில் மூன்று வேளையும் அன்னதானம் அளிக்கப்படுகின்றது. நான்கு

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

மணிக்கு பெண்களால் விளக்கு பூஜை செய்யப்பட்டு மறுநாள் அழகாபுரி கோயிலில் இருந்து நேர்த்திக்கடன் செலுத்தியவர்கள் பால்குடம் எடுத்து ஐந்து தாத்தாக்கள் சமாதிக்குச் செல்கின்றனர். பின்பு பெத்தாக்கம்மாள் பிறந்த இடமாகிய சீப்பாலக்கோட்டைக்குச் சென்று பிறந்த வீட்டாரின் அனுமதியினைப் பெறுகின்றனர். அதற்குப் பிறகு பூக்குழி இறங்கிய பகுதிக்குச் சென்று அர்ச்சனை முடித்து அவர்தம் ஊர்களுக்குத் திரும்புகின்றனர்.

பெத்தாக்கம்மாள்பூக்குழி இறங்கிய போது ஆடை வியாபாரியால் கொடுக்கப்பட்ட மஞ்சள் நிற சேலையை நினைவூட்டும் வண்ணம் வழிபாட்டின் பொழுது உறவினர்கள் மஞ்சள் நிற சேலை மற்றும் வேட்டிகளை அணிந்து கொள்கின்றனர். அம்மனுக்கு காதோல கருகமணி , மஞ்சள், மல்லிகை வைத்து வணங்கப்படுகின்றது.

பெத்தாக்கம்மாள் சித்திரா பௌர்ணமி அன்று பூக்குழி இறங்கியதால் வருட வருடம் சித்ரா பௌர்ணமி அன்றும் உறவினர்கள் சென்று பொங்கல் வைத்து வழிபாடு செய்கின்றனர்

**பெரிய கும்பிடு வழிபாடு**

12 வருடத்திற்கு ஒருமுறை பெத்தாக்கம்மாள் வழிபடும் பங்காளிகள் பெரிய கும்பிடு என்னும் வழிபாட்டு முறை திருவிழாவை கடைப்பிடிக்கின்றனர் பெரிய கும்பிடு திருவிழா கும்பிடுவதற்கு ஐந்து தாத்தாக்கள் சமாதியில் குறி கேட்கப்படுகிறது. பறவை (காகம் அல்லது பருந்து ) வானில் பறப்பதை ஒப்புதல் குறியீடாக எடுத்துக் கொள்ளப்படுகிறது.

**கழிப்பு கழித்தல் நிகழ்வு**

பெத்தாக்கம்மாள் பிறந்த வீடாகிய கம்பளத்து நாயக்கர் வீட்டில் சென்று உத்தரவு கேட்கின்றனர். அவர்கள் சோவி போட்டு, சகுனம் பார்த்து ஒப்புதல் அளிக்கின்றனர். அவர்கள் நேரமும் நாளும் குறித்து தருகின்றனர்.

**பூவெடுத்துக் கொடுத்தல் நிகழ்வு**

பூவெடுத்து கொடுத்தல் நிகழ்வு என்பது 9 ,11 போன்ற ஒற்றைப்படை கணக்கில் பங்காளிகளின் வயதுக்கு வராத பெண் பிள்ளைகள் விரதம் இருக்கின்றனர். பிறகு அவர்கள் மஞ்சள் நீராட்டப்பட்டு உருமி அடித்து சாமி இறக்குதல் நிகழ்வு நிகழ்கிறது. சாமி இறங்கிய பெண் பிள்ளை பூ (கங்கு) அள்ளி கொடுக்கின்றார். இது ஒப்புதல் குறியீடாக எடுத்துக் கொள்ளப்படுகின்றது.

**நம்பிக்கை**

பெரியசாமி கும்பிடு நிகழ்வின் வழிபாட்டிற்கு பெட்டி எடுத்தல், பெட்டி செய்தல், சேலை நெய்தல் இவற்றிற்கான செய்தி உறவினர்களால் அறிவிக்கப்படும் முன்னமே தொடர்புடைய நெசவாளி மற்றும் பெட்டி செய்பவர்களுக்கு அம்மனால் குறிப்புரைக்கப்படும் என்று கூறப்படுகின்றது.

அம்மனுக்கு அணிவிக்கப்படும் சேலை நெய்யும் நெசவாளி சேலை நெய்யப்படும் வரை கண்களை மூடிக்கொண்டு தான் நெசவு செய்வார்.

**முடிவுகள்**

தீப்பாய்தல் அல்லது உடன்கட்டை ஏறும் வழக்கம் கிராமங்களில் இருந்த மையை அறிய முடிகிறது. பெற்றோர், கணவன் வீட்டார், ஜமீன்தார் போன்றோரின் அனுமதியுடன் தான் இந்நிகழ்வு நடைபெற வேண்டும் என்ற கட்டமைப்பினைத் தெரிந்து கொள்ள முடிகின்றது.

சமூகத்தில் பெற்றோரும் அரசும் தீப்பாய்தலை ஊக்கப்படுத்தாத தன்மையை விளங்கிக் கொள்ள முடிகின்றது.

வயது வேறுபாடு உடைய திருமணத்தை அச்சமூகத்தார் வரவேற்கவில்லை.

நாயுடு சமூகத்தினராக இருந்தாலும் உட்பிரிவுகளுக்குள் மணம் முடித்துக் கொள்ளும் முறை ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்திருக்கவில்லை.

வீரதீர செயல்களைச் செய்பவர்களுக்குப் பெண் கொடுக்க முன் வரும் வழக்கம் இருந்தமையை அறிந்து கொள்ள முடிகிறது.

பில்லி சூனியத்தின் மீதான நம்பிக்கை இருந்தமையை அறிய முடிகிறது.

வேற்று இனத்தில் திருமணம் முடிக்கும் வழக்கம் வரவேற்கப்படாவிட்டாலும் இன்றுவரை வழிபாட்டுச்சடங்குகளில் அவர்கள் ஈடுபடுத்தப்படுவதிலும் அவர்களுக்கான முன்னுரிமையினை வழங்குவதிலுமிருந்து சடங்குகளைப் பின்பற்றுவதில் உள்ள ஆழமான நம்பிக்கையை உணர முடிகிறது.

கணவருக்காகத் தீப்பாய்ந்து தன்னை மாய்த்துக் கொள்ளும் பெண்ணை இறைநிலையாக ஏற்றுக்கொள்ளும் வழக்கினை அறிய முடிகிறது.

ராஜா, ஜமீன்தார், நாட்டாமை என்ற அடுக்கடுக்கான சமூக வழக்கம் இருந்தமையைத் தெரிந்து கொள்ளமுடிகிறது.

தேவராட்டம், கரகாட்டம், உருமிஅடித்தல், கும்மியாட்டம் போன்ற கலைகள் தொன்றுதொட்டு இன்று வரை வழக்கில் இருந்து வருகின்றன.

நிறைவேறாத ஆசையுடன் இறந்தவர்களின் ஆசையை நிறைவேற்றும் வழக்கம் முக்கிய நோக்கமாக வெளிப்படுகிறது.

மக்களின் வாழ்க்கையில் சிறு தெய்வ வழிபாடு பெறும் இடத்தை இதன்வழி அறியமுடிகிறது.

வருடம் வருடம் நிகழும் வழிபாட்டு முறைக்கு உள்ளூர் மற்றும் வெளியூரில் உள்ள உறவினர்கள் கூடிப்பழகுவதன்வழி அடுத்த தலைமுறையினரும் இதில் பங்கெடுத்து உறவுகளைப் பலப்படுத்திக் கொள்கின்றனர். உறவுகள் மீதான நம்பிக்கையையும் பாதுகாப்பையும் இதன் வழி பெறுகின்றனர்.

இவ்விழாவில் பெண்களுக்கு அளிக்கப்படும் முக்கியத்துவத்திலிருந்து அச்சமூகத்தில் பெண்கள் மதிக்கப்படும் பண்பாட்டினை அறியமுடிகிறது.

**துணை நூற்பட்டியல்**

[1]. முனைவர் ச முருகானந்தம், மக்கள் வழக்காற்றியல், சித்திரா நிலையம், 7/40 கிழக்கு செட்டித் தெரு, பரங்கிமலை ,சென்னை 16.

[2]. பேராசிரியர் அ .ராஜேந்திரன், நாட்டுப்புற பண்பாட்டு பழக்கவழக்கங்கள், திருமலா பப்ளிகேஷன்ஸ், நெ. 17 , 19 வது தெரு, நேரு காலனி , பழவந்தாங்கல் சென்னை 114